**செய்தி வெளியீடு எண்: 719** **நாள்:25.10.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற இந்திய – சீன உச்சிமாநாட்டிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள்.

அக்கடிதத்தில், சீன குடியரசுத் தலைவரின் வருகையின் போது செய்யப்பட்ட வரவேற்பு ஏற்பாடுகள், அன்பான உபசரிப்பு ஆகியவை நமது கலாச்சாரத்தையும், மரபையும் ஒருசேர பிரதிபலித்தது என்றும், மாமல்லபுரத்தில் நடைபெற்ற இந்திய – சீன உச்சிமாநாடு தனக்கும், சீன நாட்டு குடியரசுத் தலைவருக்கும் மறக்க முடியாத நிகழ்வாக இருந்தது என்றும், உச்சிமாநாட்டிற்கு சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்தமைக்கு தமிழ்நாட்டு பொதுமக்களுக்கும், கலாச்சார, சமூக, அரசியல் அமைப்புகளுக்கும், தமிழ்நாடு அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் தன்னுடைய பாராட்டுதல்களை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**